தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 15.10.2013

### இறைச்சிக் கோழி வளர்ப்பு: விவசாயிகளுக்கு 5 நாள் பயிற்சி

தமிழ்நாடு அரசு கோழி அபிவிருத்தித் திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் 22 பேருக்கு இறைச்சிக் கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில், கோழி அபிவிருத்தித் திட்டத்தில் 5 நாள் சிறப்பு பயிற்சி முகாம் அபிஷேகப்பட்டியில் உள்ள கால்நடைப் பண்ணையில் நடைபெற்றது. இதற்காக தேர்வு செய்யப்பட்ட 22 பேருக்கு இங்குள்ள கோழிப் பண்ணையில் செயல்முறை பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இறைச்சிக் கோழி வளர்ப்பு பண்ணையை நேரில் பார்வையிடும் வகையில் வன்னிக்கோனேந்தலில் உள்ள கோழிப் பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பண்ணைக்கு கொட்டகை அமைப்பது தொடங்கி, குஞ்சி பொறிப்பகம், குஞ்சு வளர்ப்பு, தீவன மேலாண்மை, நோய் மேலாண்மை, பராமரிப்பு முறை, சந்தை வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து கற்றுத்தரப்பட்டது.

பயிற்சியின் இறுதிநாளான திங்கள்கிழமை பண்ணை அமைத்தல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த கல்லூரி முதல்வர் செ. பிரதாபன், பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ்களையும், கோழி வளர்ப்புப் புத்தகங்களையும் வழங்கிப் பாராட்டிப் பேசினார்.

கால்நடை பண்ணை வளாக பேராசிரியர் வெ. தனசீலன், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் கெங்கராஜ், மாவட்ட கால்நடைப் பண்ணை துணை

இயக்குநர் விக்டர் ஜெபராஜ், உதவிப் பேராசிரியர்கள் சே. செந்தில்குமார், கார்த்திகேயன், மணிவண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விலையில்லா கறவை பசு கொள்முதலுக்கு "கமிஷன்'**

அம்பாசமுத்திரம் கால்நடை பாரமரிப்புத் துறை உதவி இயக்குநரக கட்டுப்பாட்டுக்குள் வரும் பகுதிகளில் விலையில்லா கறவை பசுக்கள் கொள்முதல் செய்வதற்கு தரகு கமிஷனாக மாட்டுக்கு ரூ.2 ஆயிரம் பெறுவதாக புகார் எழுந்துள்ளது.

இதுதொடர்பாக பிராணிகள் நல விழிப்புணர்வு அறக்கட்டளைத் தலைவர் எல். ராபர்ட், தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள புகார் மனு:

கிராமப்புற பெண்கள் பொருளாதார ரீதியாக மேம்பட வேண்டும் என்பதற்காக விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தை தமிழக முதல்வர் செயல்படுத்தி வருகிறார். ஆனால், திருநெல்வேலி மாவட்டத்தில் சில ஊராட்சிகளில் பசுக்கள் கொள்முதல் செய்வதற்கு கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் கமிஷன் பெற்று தரமற்ற மாடுகளை கொள்முதல் செய்துள்ளனர்.

நான்குனேரி ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட அழகப்பபுரம் ஊராட்சியில் 50 பயனாளிகளுக்கு மாடுகள் வழங்க முடிவு செய்யப்பட்டு, கடந்த மாதம் 50 மாடுகள் கொள்முதல் செயய்ப்பட்டன. இதற்காக தரகர்களிடம் மாடு ஒன்றுக்கு தலா ரூ.2 ஆயிரத்தை கமிஷனாக கால்நடை பராமரிப்புத்துறையினர் பெற்றனராம். பயனாளிகளை மாடுகளை தேர்வு செய்ய கோரியதற்கு, அதற்கு பதிலாக கமிஷன் பெற்றவர்களிடம் மாடுகளை கொள்முதல் செய்ய நிர்பந்தம் செய்துள்ளனர். இதேபோல, மூலைக்கரைப்பட்டி ஊராட்சியில் 50 மாடுகள் கொள்முதல் செய்தபோதும் கமிஷன் பெற்றதாக புகார் கூறப்படுகிறது. இது தொடர்பாக, உரிய விசாரணை நடத்தி தொடர்புடைய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அமுல் பால் விலை லிட்டருக்கு ரூ. 2 உயர்வு: இன்று முதல் அமல்**

தில்லி, தலைநகர வலயப் பகுதிகளில் அமுல் பாலின் விலை லிட்டருக்கு ரூ. 2 உயர்த்தப்பட்டுள்ளது. இது செவ்வாய்க்கிழமை (அக்டோபர் 15) முதல் அமலுக்கு வருகிறது.

இது தொடர்பாக அமுல் பால் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

"அமுல் கோல்ட் - ஃபுல் கிரீம் பாலின் விலை ரூ.42-லிருந்து ரூ.44-ஆகவும், டோன்டு பால் ரூ. 32-லிருந்து ரூ. 34 ஆகவும், டபுள் டோன்டு பால் லிட்டருக்கு ரூ. 28-லிருந்து ரூ.30-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டின் பிற பகுதிகளிலும் இந்த விலை உயர்வைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கால்நடைத் தீவனம், டீசல் விலை உயர்வு ஆகியவற்றின் காரணமாக பால் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள பால் கூட்டுறவு ஒன்றிய அலுவலகம் முன் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி, திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பால் கொள்முதல் விலையை பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 5-ம், எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 7-ம் என உயர்த்தி வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு தமிழக அரசு ஊக்கத் தொகையாக ரூ. 3 வழங்க வேண்டும்.

ஆவின் கால்நடை தீவனத்தை தரமானதாகவும், தேவையான அளவுக்கும் உற்பத்தி செய்ய வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் ஆரம்ப கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அனைவரையும் பணி நிரந்தரம் செய்து, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். கறவை மாடுகள் வாங்குவதற்கு வட்டியில்லாமல் மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் அனைத்து மட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும்

முறையாக தணிக்கை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட  கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர். காசிநாதன், செயலர் வி. துரைராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

சங்க மாநிலப் பொதுச் செயலர் கே. முகமது அலி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கே. காமராஜ், செயலர் சாமி. நடராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பூதலூர் பால் கூட்டுறவு சங்கத் தலைவர் என். வசந்தா, துணைத் தலைவர் டி. மங்கையர்கரசி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 70.77 அடி**

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 70.77 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 784 கனஅடி நீர் திறந்துவிடப்பட்டது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,400 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 11.28 டி.எம்.சி.

**கொடுமுடி விவசாயிகளுக்கு வயல்வெளிப் பயிற்சி**

கொடுமுடி இச்சிப்பாளையம் வாய்க்கால்செட்டில் நடைபெற்ற வயல்வெளிப் பயிற்சி முகாமில் மக்காச்சோளம் பயிரிடுவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திங்கள்கிழமை நடைபெற்ற முகாமினை கொடுமுடி வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.சாவித்திரி தலைமை வகித்து துவக்கி வைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கோமதி, "ஆத்மா' திட்டம் மற்றும் பண்ணைப் பள்ளியின் நோக்கம் பற்றிப் பேசினார்.

ஓய்வு பெற்ற வேளாண்மை துணை இயக்குநர் சின்னுசாமி கிருஷ்ணன், மக்காச்சோளம் பயிரிடுவது மற்றும் விவசாய உயர் தொழில்நுட்பம் குறித்தும்

விவசாயிகளிடையே விளக்கி பயிற்சி அளித்தார். இறுதியில், விவசாயிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இம் முகாமில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். தொழில்நுட்ப சிறப்பாசிரியர் மல்லீஸ்வரி நன்றி கூறினார்.

**இயற்கை வேளாண்மை கருத்தரங்கம்**

கோபியில் இயற்கை வேளாண்மை மற்றும் கால்நடை பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

கோபி, மைராடா வேளாண் அறிவியல் நிலையம், கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை இணைந்து இயற்கை வேளாண்மை கால்நடை பாதுகாப்பு மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் கருத்தரங்கம் நடத்தின.

கருததரங்கில், உலக மகளிர் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி வரவேற்றார். கோபி வேளாண் அறிவியல் நிலையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.அழகேசன், அரிமானூர் இயற்கை வாழ்வியல் இயக்கத் தலைவர் காசிபிச்சை ஆகியோர் பேசினார்.

தஞ்சாவூர் சிந்தனையாளர் மன்றத் தலைவர் இரா.ரத்தனகிரி கிராம பொருளாதாரம் கால்நடைகளின் பங்கு குறித்தும், சத்தி தமிழக உழவர் தொழில் நுட்பக் கழகம் எஸ்.ஆர்.சுந்தரராமன் நஞ்சில்லா உணவு சமைப்போம் என்ற தலைப்பிலும் பேசினர்.

கருத்தரங்கில் கோபி மற்றும் கோபியை சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்குஇலவச அகத்தி மரக்கன்றுகள்**

அரசின் விலையில்லா கால்நடைகளுக்கு தீவனம் உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இலவச அகத்தி மரக்கன்றுகள், கருப்பாயூரணி அரசு கால்நடை மருத்துவமனை மூலம் திங்கள்கிழமை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தலா 25 மரக்கன்றுகள் வீதம் சுமார் 2000 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. கால்நடை மருத்துவர் டி.முருகலட்சுமி

மரக்கன்றுகளை வழங்கினார். கருப்பாயூரணி மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**மண்புழு உரம், தேனீ வளர்ப்புக்கு ரூ.5 லட்சம் ஒதுக்கீடு**

கொடைக்கானல் பகுதியில் இயற்கை வேளாண்மை செய்தவதற்காக மண்புழு மற்றும் தேனீ வளர்ப்பதற்கு ரூ.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கொடைக்கானல் தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.ராஜாமுகமது தெரிவித்தது:

கொடைக்கானல் பகுதியில் இயற்கை வேளாண்மை முறையில் உற்பத்தியாகும்

குளிர்கால காய்கறிகள் மனிதனின் அன்றாட சரிவிகித உணவுத் தேவையில் முக்கிய பங்கு வகிக்கிறது. உடலுக்குத் தேவையான முக்கிய வைட்டமின்கள் பச்சை மிளகாய், தக்காளி, காலிபிளவர், கீரை வகைகள், பீன்ஸ், கேரட், முட்டைக்கோஸ் ஆகியவற்றில் அதிக அளவில் கிடைக்கின்றன. இதுபோன்ற மலைக் காய்கறிகள் இயற்கை வேளாண்மை முறையில் கொடைக்கானல் பள்ளங்கி கிராமத்தில் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்றன. கொடைக்கானல் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம் இயற்கை வேளாண்மை முறையினை விரிவுபடுத்தும் நோக்கில் நிகழாண்டில் 25 மண்புழு உரப்படுகைகள் அமைப்தற்கு ரூ 1.25 லட்சம், தேனீ வளர்ப்பிற்குரிய 200 பெட்டிகள், தேனீ குடும்பங்கள், 10 தேன் சுத்திகரிக்கும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் இயற்கை வேளாண்மை முறையில் தரமான காய்கறிகளை உற்பத்தி செய்ய முடியும். இயற்கை முறையில் சாகுபடி செய்யப்படும் பொருள்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு இருப்பதால் விவசாயிகளிடம் இயற்கை வேளாண்மைக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 15.10.2013

### மஞ்சள் விலை அதிகரிப்பு மகிழ்ச்சியில் விவசாயிகள்

திண்டுக்கல் : மஞ்சள் விலை குவிண்டாலுக்கு, ரூ. 800 அதிகரித்திருப்பதால், விவசாயிகள் சேமித்து வைத்துள்ள மூட்டைகளை, நவம்பருக்குள் விற்பனை செய்யுமாறு, வேளாண்மை துறை அறிவுறுத்தியுள்ளது.

கோவை வேளாண்மை பல்கலை கண்காணிப்பில் செயல்பட்டு வரும், சந்தை தகவல் மையம், மஞ்சளுக்கான தேவை குறித்து சமீபத்தில், ஆய்வு நடத்தியது. இதன்படி, மஞ்சள் விலை தற்போது குவிண்டாலுக்கு ரூ. 5,700 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் இருப்பு வைக்கப்பட்டிருக்கும் 45 லட்சம் மஞ்சள் மூட்டைகளில், தமிழகத்தின் பங்களிப்பு 30 லட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான, மஞ்சள் சாகுபடி பரப்பளவு 40 சதவீதமாக குறைந்துள்ளது. எனவே, மஞ்சளின் தேவை அதிகரித்து, நவம்பர் வரை, குவிண்டாலுக்கு ரூ. 800 வரை, விலை உயர வாய்ப்புள்ளது.விவசாயிகள் தங்களிடமுள்ள மஞ்சள் மூட்டைகளை, நவம்பருக்குள் அதிக லாபத்திற்கு விற்பனை செய்யலாம், என வேளாண்மை துறையினர் தெரிவித்தனர்.

### பருவமழை காலதாமதம் சாகுபடி விவசாயிகள் கவலை

கடையநல்லூர்:தொடர்ந்து பருவமழை காலதாமதமாகி வருவதால் நெல் பயிரிட்ட கார் சாகுபடி விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

கடையநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் போதுமான அளவில் கார் சாகுபடிக்கான மழை பெய்யாததால் ஏராளமான விவசாய நிலங்கள் அதனை

மேற்கொள்ள முடியாமல் நிலங்களை தரிசாக விட்டுவிட்டனர். அணைப்பகுதியை ஒட்டியுள்ள பெரும்பாலான விவசாயிகள் மட்டுமே கார் சாகுபடியை மேற்கொண்டு வந்தனர். கடந்த ஆண்டு பிசான சாகுபடியை முறையாக மேற்கொள்ள முடியாமல் இருந்து வந்த விவசாயிகள் நடப்பாண்டு பருவமழை எப்படியும் கைகொடுத்துவிடும் என்ற நம்பிக்கையில் தங்களது பிசான சாகுபடிக்கான விவசாய பணிகளை துவக்கி வருகின்றனர்.

நாற்றுகளை பாவி வந்த நிலையில் மணக்காடு, தார்க்காடு, வைரவன்குளம் பாசனம் உள்ளிட்ட பகுதி விவசாயிகள் பாவிய நாற்றுகளை கையும் செய்துவிட்டனர். இதனிடையில் பருவமழை பெய்வதில் தொடர்ந்து காலதாமதம் ஆகி வருகிறது. புரட்டாசி மூன்றாம் சனி எப்படியும் மழை எட்டிப்பார்க்கும் என்ற விவசாயிகளின் ஏக்கமும் ஏமாற்றத்தையே தந்தது.

புரட்டாசி நான்காம் சனியும் முடிவடைந்துவிட்ட நிலையில் வரும் ஐப்பசி மாதம் பிறக்க உள்ள நிலையில் பருவமழை காலதாமதமாகி வருவதால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். இதனால் பயிரிட்டுள்ள சுமார் 800 ஏக்கர் பிசான சாகுபடிக்கான நடுவை பயிர்கள் தண்ணீர் இல்லாத ‹ழ்நிலையில் இருந்து வருகிறது. எப்படியும் வருண பகவானின் பார்வை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கிணற்று நீரை வைத்து தற்போது பிசான சாகுபடியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## பயிர்களை நாசம் செய்யும் எலிகள் கி.கிரி விவசாயிகள் கலக்கம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற் பயிரில் எலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விளைச்சல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 25 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கே.ஆர்.பி, அணை பாசன பகுதிகள் மற்றும் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் தற்போது பூ பருவம், பால் பிடிக்கும்

பருவம் மற்றும் அறுவடை நிலை என அனைத்து பருவங்களிலும் உள்ளது. இந்நிலையில் தற்போது நெல் பயிரில் எலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. குறிப்பாக வரப்பு எலி, வெள்ளை எலி, புல் எலி மற்றும் சுண்டெலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. நெற் கதிர்கள் வளர்ந்து நிற்கும் நிலையில் எலிகள் கதிர்களை வெட்டி எடுத்து வலைகளில் சேமித்து வைக்கிறது.

எலிகளின் தாக்குதலால் மட்டுமே ஐந்திலிருந்து, 10 சதவீதம் மகசூல் குறைகிறது.

எலிகளின் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற காலம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களாகும். அனைத்து வகையான எலிகளும் நெற்பயிரினை அனைத்து நிலைகளிலும் தின்று தீர்க்கிறது.

எலி வகைகள் அனைத்தும் நன்றாக நீந்தக்கூடியவை என்பதால் வயல்களில் தேக்கப்படும் நீர் எலிகளின் தாக்குதலுக்கு ஒரு தடையாக இருக்காது.

இந்நிலையில், கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் எலிகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

நெற் பயிரை அழிக்கும் எலிகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் துறையினர் கூறியது:

நெற்பயிரை பலவகையில் தாக்கி சேதம் உண்டாக்கும் எலிகளை கட்டுப்படுத்த உழவியல், கைவினை, ரசாயன மற்றும் உயிரியல் முறைகளை கையாள வேண்டும். பயிற் பருவத்தின் துவக்கத்தில் வரப்புகளை வெட்டி எலிகளை பிடித்து அழிக்க வேண்டும்.

எலிகள் வலைகளை அமைக்க முடியாதபடி குறுகிய வரப்புகளையே அமைக்க வேண்டும். வயலுக்கு அருகாமையில் வைக்கோல் போர் அமைக்க கூடாது. வயல்களிலும், வரப்புகளிலும் சிறு செடிகளோ, களைகளோ இல்லாமல் அழிக்க வேண்டும். பயிர் காலத்தில் தஞ்சாவூர் எலிக்கிட்டிகளை ஏக்கருக்கு, 25 முதல் 30 கிட்டிகளை வரப்பிலிருந்து உள்புறமாக மூன்று மீட்டர் விட்டு வைக்க வேண்டும். எலிகளின் இயற்க்கை எதிரிகளான தண்ணீர் பாம்புகளை கொல்லக்கூடாது. ஆந்தை போன்ற இரவுப் பறவைகள் அமர்வதற்கு "டி' வடிக் குச்சிகளை வயல்களிலும், வரப்புகளிலும் வைக்க வேண்டும். மேலும், ஜிங்பாஸ்பைடு மருந்தை, 1:49 அல்லது வார்பரின், 1:19 என்ற அளவில் நெல் பொறியுடன் கலந்து

சிறிது தேங்காய் எண்ணையும் கலந்து விளக்குபொறி தயாரித்து வைக்கலாம். அலுமினியம் பாஸ்பைடு மாத்திரியை வலை ஒன்றுக்கு ஒரு மாத்திரை வீதம் இட்டு வலையை ஈர களிமண் கொண்டு மூட வேண்டும். ரத்தக் கசிவை ஏற்படுதுக்கின்ற புரோமடையலோன் 0.005 சத ரோபேன் கேக்குகளை வரப்புகளில் மூன்று மீட்டர் இடைவெளிக்கு ஒரு கட்டி வீதம் வைத்தும் எலிகளை ஒழிக்கலாம்.
இந்த கட்டுப்பாட்டு முறைகளை விவசாயிகள் தனித்தனியாக மேற்கொள்ளாமல் ஒருங்கிணைந்த வகையில் ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் கையாண்டு எலிகள் தாக்குதலில் இருந்து நெற் பயிரை பாதுகாக்கலாம். இவ்வாறு கூறினர்.

## வரத்து குறைவுடன் வெளியேற்றம் அதிகரிப்பு குறைந்து வரும் பவானிசாகர் நீர்மட்டம்

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு, தண்ணீர் வரத்து குறைந்தும்,

அணையில் இருந்து வெளியேறும் தண்ணீர் அளவு அதிகரித்ததால், அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.
சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் கலக்கும் இடத்தில், இந்த அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் சகதி, 15 அடி கழித்து, அணையின் மொத்த நீர்பிடிப்பு உயரம், 105 அடியாக கணக்கிடப்படுகிறது.
கடந்த, இரண்டு ஆண்டுகளாக அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், பருவமழை பொய்த்ததால் அணையின் நீர்மட்டம், 27 அடியாக குறைந்தது.
இந்நிலையில், இந்தாண்டின் இடைகாலத்தில், நீலகிரி மலைப்பகுதியில் கனமழை பெய்தது. இதனால் அணைக்கு வரும் தண்ணீர் அதிகரித்து, அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் உயர்ந்து, கடந்த ஆகஸ்ட்டில், 85 அடியை தொட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.
பவானிசாகர் அணையில் இருந்து வரும், பவானி ஆறு மூலம் தடப்பள்ளி,

அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதிகளை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது. இதேபோல், கீழ்பவானி வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படும் தண்ணீர் மூலம், ஈரோடு, கரூர், திருப்பூர் ஆகிய மூன்று மாவட்டங்களை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் வளம் பெறுகிறது. அணையின் நீர்மட்டம் அதிகரித்ததால், அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதிக்கு வினாடிக்கு, 1,300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதேபோல் கடந்த ஆகஸ்ட், 23ம் தேதி, கீழ்பவானி வாய்க்காலில், வினாடிக்கு, 2,400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதையடுத்து கடந்த இரண்டு மாதங்களாக, அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில் பருவமழை பெய்யவில்லை. இதனால் அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்தது. அதே சமயம், அணையில் இருந்து பவானி ஆறு மற்றும் கீழ்பவானி வாய்க்கால் ஆகிய, இரண்டிலும் பாசனத்துக்காக தொடர்ந்து தண்ணீர் திறந்துள்ளது.

அணைக்கு வரவு குறைந்தும், அணையில் இருந்து வெளியேறும் தண்ணீர் அளவு அதிகரித்ததால், அணையின் நீர்மட்டம் வேகமாக குறைய துவங்கியது. நேற்று மாலை, 4 மணியளவில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 70.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 2,489 கனஅடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து, பவானி ஆற்றில் வினாடிக்கு, 1,200 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 2,400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம், 23ம் தேதி அணையின் நீர்மட்டம், 85.30 அடியாக இருந்தது. தண்ணீர் திறக்கப்பட்டு, 50 நாட்கள் கடந்த நிலையில், 14 அடி தண்ணீர் குறைந்துள்ளது குறிப்பிடதக்கது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து கீழ்நோக்கி வருவதால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

## கொப்பரை தேங்காய் ரூ.45 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 45 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்து வருகிறது. கடந்த வாரம் நடந்த கொப்பரை தேங்காய் ஏலத்தில், சுற்று புறப்பகுதியில் இருந்து விவசாயிகள், 1,529 மூட்டைகளில், 75 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ, ஒன்று குறைந்தபட்ச விலையாக, 64.85 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 67.65 ரூபாய்க்கும் ஏலம் போனது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் கிலோ ஒன்று குறைந்தபட்ச விலையாக, 36.10 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 63.70 ரூபாய்க்கும் என மொத்தம், 45 லட்சத்துக்கு ஏலம் போனது. கடந்த புதன் கிழமை நடந்த ஏலத்தை விட, நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் கிலோ, ஒன்றுக்கு கொப்பரை தேங்காய், 75 காசுகள் குறைந்து விற்பனையானது.

## அறுவடைக்கு தயாராகவுள்ள கோரைகள் ஆள் பற்றாக்குறை: விவசாயிகள் கவலை

குளித்தலை: பண்டை காலம் முதல், இன்றைய நவீன காலம் வரை, அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் பொருள் கோரைப்பாய். சாமானியர்கள் முதல், வசதி படைத்தவர் வரை எளிதாக வாங்கும் அளவுக்கு கோரைப்பாயின் விலை மிகக்குறைவாக உள்ளதால், அனைவரும் இதை விரும்பி வாங்குகின்றனர்.

கோரைப்பாயின் சிறப்பு என்னவென்றால், கோடை, மழை, குளிர் என, எந்த பருவ காலத்திலும் அதை பயன்படுத்தலாம்.

கோரைப்பாய் இயற்கையில் கோரைப்புற்களை கொண்டு தயாரிக்கப்படுவதால், எளிதாக மடக்ககூடிய படுக்கை விரிப்பாகவும் உள்ளது. இவை எங்கு அதிக அளவில் விளைகின்றது என பார்த்தால், காவிரி ஆற்றங்கரைகளில் தான். இந்த

புற்கள் ஆற்றின் நீரின் அளவிற்கு ஏற்றார்போல் உயரமாக வளரும்.

கரூர் மாவட்டத்தில் குளித்தலை, வாங்கல், என்.புதூர், பிச்சம்பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம், திருமாகூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 6,000 ஹெக்டர் நிலப்பரப்பில், கோரைப்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் இருந்துதான், பாய்கள் தயாரிக்கும் சேலம், குறிச்சிபாடி, தர்மபுரி ஆகிய பகுதிக்கு, அதிக அளவில் கோரைபுற்கள் லாரிகள் மூலம் அனுப்பப்படுகிறது.

முதலில் ஆற்றங்கரையோரம் உள்ள கோரைபுற்கள் அறுக்கப்படுகிறது. பின் இதற்கென தயாரிக்கப்பட்ட கத்தியால் புற்கள் இரண்டாக கீறப்படுகிறது. இரண்டு கைப்பிடி அளவுள்ள கோரைப்புற்கள் முதலில் கயிற்றால் கட்டப்படுகின்றன. இவ்வாறு கட்டப்பட்ட, ஐந்து பகுதிகள் கொண்டவற்றை, ஒரு கட்டு என கணக்கிடப்படுகிறது.

வறட்சியால் வாடிய கோரை பயிர்கள், தற்போது காவிரி ஆற்றில் தண்ணீர் ஓடுவதால், மீண்டும் செழித்து வளர்ந்துள்ளன. இருப்பினும் வளர்ந்துள்ள கோரையை அறுவரை செய்ய, ஆட்கள் பற்றாக்குறையால் விவசாயிகள் திணறி வருகின்றனர்.

இதுகுறித்து குளித்தலை விவசாயிகள் கூறியதாவது:

குளித்தலை பகுதியில் மட்டும், 1,500 ஏக்கரில் கோரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பயிரிருக்கு அதிக உரம், பராமரிப்பு செலவு தேவையில்லை என்பதால், ஒரு ஏக்கருக்கு, 3 முதல், 4 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால், 15 ஆயிரம் ரூபாய் வரை கோரையை விற்பனை செய்ய முடியும். கோரை பயிரை வெட்ட, எந்தவிதமான கருவிகளும் கண்டுபிடிக்கவில்லை. இதனால் ஆட்களை வைத்தே கோரை அறுக்கப்பட்டு வருகிறது. இதில், ஒரு கட்டு வெட்ட, ஐந்து ரூபாய் கூலி வழங்கப்படுகிறது. தினமும் ஒரு நபர், 150 கட்டுகள் வரை அறுக்க முடியும்.

கோரை பண்ணைகளில் அறுவடை, சம்பா சாகுபடி நடப்பதால், தற்போது ஆட்கள்

பற்றாக்குறையாக உள்ளது. ஆதலால், ஒன்று அல்லது இரண்டு ஏக்கரில் சாகுபடி செய்துள்ள சிறு விவசாயிகளுக்கு, முற்றிலும் ஆட்கள் கிடைக்கவில்லை.
பொதுவாக கோரை பயிர், 1.2 மீட்டர் உயரம் வளரும் தன்மை கொண்டது. உரிய காலத்தில் அறுவடை செய்தால், மீண்டும் வளர்ந்து லாபம் கொடுக்கும்.
இப்போது ஆட்கள் பற்றாக்குறையால் அறுவடை செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மேலும் பருவமழை துவங்கினால், தண்ணீரில் கோரைகள் மூழ்கும் அபாயமும் உள்ளது. வறட்சியால் திண்டாடி வந்த விவசாயிகளுக்கு, காவிரி ஆற்றில் திறந்து விடப்படும் நீரால், கோரை செழித்து வளர்ந்து உள்ளது. மேலும் கட்டுக்கு ஏற்ற விலை கிடைக்கும் சூழ்நிலையில், விவசாயிகள் கோரையை அறுவடை செய்ய முடியால் பரிதவித்து வருகின்றனர்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

### விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்

காஞ்சிபுரம் : விவசாயிகள் குறைதீர்வுக் கூட்டம் வரும், 18ம் தேதி முற்பகல், 11:00 மணிக்கு நடைபெற உள்ளது.காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக, ஊரக வளர்ச்சி முகாம் கூட்ட அரங்கில் நடக்கும் கூட்டத்தில், வேளாண் துறை சார்ந்த புகார்களை, விவசாயிகள் பதிவு செய்யலாம் என, மாவட்ட நிர்வாகம் அறிவித்து உள்ளது.

### வேர்க்கடலை அறுவடை தீவிரம்

அவலூர்பேட்டை :அவலூர்பேட்டை பகுதிகளில் மானாவரி வேர்க்கடலை எடுக்கும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அவலூர்பேட்டை பகுதியில் மானாவரி வேர்க்கடலை விதைப்பு பணிகள் ஆடி மாதத்தில் நடந்தது. சரியான மழை இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் பட்டம் தவறி, வேர்க்கடலை விதைத்தனர். மூன்று மாதம் முடிந்து நேற்று குந்தலம்பட்டு உள்ளிட்ட சில கிராமங்களில் விவசாயிகள் வேர்க்கடலை அறுவடை பணியில் ஈடுபட்டனர். மழையின்மையால் மகசூல் குறைந்து காணப்பட்டது. மேலும், பசு மாடுகளுக்கு தீவனமான வேர்க்கடலை கொடி தழைகள் நன்கு வளர்ச்சியடைந்திருந்தன.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 342 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 342 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 340 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, இரண்டு காசுகள் அதிகரித்து, 342 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

தற்போது, நுகர்வு அதிகரித்து வருவதால், முட்டை விலையும் உயர்ந்துள்ளது. இது, பண்ணையாளர்களை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:

சென்னை, 336, பெங்களூரு, 330, மைசூரு, 333, ஹைதராபாத், 312, மும்பை, 346, விஜயவாடா, 320, கோல்கத்தா, 370, பர்வாலா, 312, டில்லி, 325.

இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், அதன் விலை கிலோ, 62 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## தர்மபுரி மாவட்டத்தில் கோமாரி நோய்...தடுப்பூசி முகாம் கால்நடை துறையுடன் வனத்துறை ஏற்பாடு

தர்மபுரி: தர்மபுரி வனக்கோட்டத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்புதுறையுடன் இணைந்து வனத்துறை சார்பாக கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடத்தப்படுகிறது.

மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரவு வெளியிட்ட அறிக்கை:

கர்நாடகா மாநில வன பகுதிகளில் வளர்க்கப்படும் மாடுகள் கோமாரி நோய் தாக்கி இறந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதையடுத்து, தர்மபுரி

வனக்கோட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனத்தை ஒட்டிய கிராமங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்பு துறையினருடன் இணைந்து, வனத்துறை சார்பாக கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடக்கிறது.

இன்று (அக்., 15) பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள பெல்ரம்பட்டியிலும், பென்னாகரம் வனச்சரகத்தில் உள்ள கூர்க்கம்பட்டியிலும், நாளை மறுநாள் (அக்., 17) பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள தாசம்பட்டியிலும், பென்னாகரம் வனச்சரகத்தில் உள்ள சின்னப்பநல்லூரிலும், 18ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள மாரவாடியிலும், ஒகேனக்கல் வனச்சரகத்தில் உள்ள போடூரிலும், 19ம் தேதி பாலக்கோடு வனசரகத்தில் உள்ள பெரியூரிலும் நடக்கிறது. ஒகேனக்கல் வனசரகத்தில் உள்ள ஊட்டமனையிலும், 21ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள கோட்டூர்மலை, ஏரிமலையிலும், 22ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள அலக்கட்டு, சத்தியாக்கொல்லை ஆகிய பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடக்கிறது.

முகாம் நடக்கும் நாட்களில் காலை, 7 மணி முதல் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி மற்றும் சிகிச்சை துவங்கவுள்ளது. எனவே தர்மபுரி வனக்கோட்டத்தில் உள்ள வனப்பகுதிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் மாடுகளை வளர்த்து வரும் விவசாயிகள் இம்முகாமை பயன்படுத்தி தங்களது கால்நடைகளை கோமாரி நோய் பாதிப்பில் இருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும்.

கோமாரி நோய் சிறப்பு முகாமிற்கு பின் வனப்பகுதியில் தென்படும் மாடுகளின் உரிமையாளர்கள் தடுப்பூசி போடப்படும் போது வழங்கும் நீல நிற அட்டையை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

மாடுகளுக்கு தடுப்பூசி வழங்கியதற்கான அட்டை இல்லாதவர்கள் மீது கோமாரி நோயால் ஏற்படும் பாதிப்புக்கு பொறுப்பாக்கப்படுவதுடன், சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

எனவே, வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் மாடுகள் வளர்க்கும் விவசாயிகள், 15ம் தேதி முதல், 22ம் தேதி வரை நடக்கும் கோமாரி நோய் தடுப்பூசி மற்றும்

சிகிச்சை முகாமில், தங்களது மாடுகளுடன் கலந்து கொண்டு பயன்பெறலாம்.
முகாம் தொடர்பான விபரங்களை விவசாயிகள் தர்மபுரி மாவட்ட வன அலுவலர் அலுவலக டெலிஃபோன், 04342-230003, தர்மபுரி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலக டெலிஃபோன் 04342-234774 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தர்மபுரி மாவட்டத்தில் கோமாரி நோய்...தடுப்பூசி முகாம் கால்நடை துறையுடன் வனத்துறை ஏற்பாடு

தர்மபுரி: தர்மபுரி வனக்கோட்டத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்புதுறையுடன் இணைந்து வனத்துறை சார்பாக கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடத்தப்படுகிறது.
மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரவு வெளியிட்ட அறிக்கை:
கர்நாடகா மாநில வன பகுதிகளில் வளர்க்கப்படும் மாடுகள் கோமாரி நோய் தாக்கி இறந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதையடுத்து, தர்மபுரி வனக்கோட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வனத்தை ஒட்டிய கிராமங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்கு, கால்நடை பராமரிப்பு துறையினருடன் இணைந்து, வனத்துறை சார்பாக கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடக்கிறது.
இன்று (அக்., 15) பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள பெல்ரம்பட்டியிலும், பென்னாகரம் வனச்சரகத்தில் உள்ள கூர்க்கம்பட்டியிலும், நாளை மறுநாள் (அக்., 17) பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள தாசம்பட்டியிலும், பென்னாகரம் வனச்சரகத்தில் உள்ள சின்னப்பநல்லூரிலும், 18ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள மாரவாடியிலும், ஒகேனக்கல் வனச்சரகத்தில் உள்ள போடூரிலும், 19ம் தேதி பாலக்கோடு வனசரகத்தில் உள்ள பெரியூரிலும் நடக்கிறது. ஒகேனக்கல் வனசரகத்தில் உள்ள ஊட்டமனையிலும், 21ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள கோட்டூர்மலை, ஏரிமலையிலும், 22ம் தேதி பாலக்கோடு வனச்சரகத்தில் உள்ள அலக்கட்டு, சத்தியாக்கொல்லை ஆகிய பகுதிகளில்

கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாம் நடக்கிறது.
முகாம் நடக்கும் நாட்களில் காலை, 7 மணி முதல் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி மற்றும் சிகிச்சை துவங்கவுள்ளது. எனவே தர்மபுரி வனக்கோட்டத்தில் உள்ள வனப்பகுதிகளுக்கு அருகில் உள்ள கிராமங்களில் மாடுகளை வளர்த்து வரும் விவசாயிகள் இம்முகாமை பயன்படுத்தி தங்களது கால்நடைகளை கோமாரி நோய் பாதிப்பில் இருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும்.
கோமாரி நோய் சிறப்பு முகாமிற்கு பின் வனப்பகுதியில் தென்படும் மாடுகளின் உரிமையாளர்கள் தடுப்பூசி போடப்படும் போது வழங்கும் நீல நிற அட்டையை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.
மாடுகளுக்கு தடுப்பூசி வழங்கியதற்கான அட்டை இல்லாதவர்கள் மீது கோமாரி நோயால் ஏற்படும் பாதிப்புக்கு பொறுப்பாக்கப்படுவதுடன், சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்படும்.
எனவே, வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் மாடுகள் வளர்க்கும் விவசாயிகள், 15ம் தேதி முதல், 22ம் தேதி வரை நடக்கும் கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் சிகிச்சை முகாமில், தங்களது மாடுகளுடன் கலந்து கொண்டு பயன்பெறலாம்.
முகாம் தொடர்பான விபரங்களை விவசாயிகள் தர்மபுரி மாவட்ட வன அலுவலர் அலுவலக டெலிஃபோன், 04342-230003, தர்மபுரி கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் அலுவலக டெலிஃபோன் 04342-234774 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### மஞ்சள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

திண்டுக்கல் : மஞ்சள் விலை குவிண்டாலுக்கு, 800 ரூபாய் அதிகரித்திருப்பதால், விவசாயிகள் தங்கள் கையிருப்பை, நவம்பருக்குள் விற்பனை செய்யுமாறு, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது. கோவை வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும், சந்தை தகவல் மையம், மஞ்சளுக்கான தேவை குறித்து சமீபத்தில், ஆய்வு நடத்தியது.
இதையடுத்து, ஒரு குவிண்டால் மஞ்சள் விலை, 5,700 ரூபாய் என நிர்ணயிக்கப்-பட்டுள்ளது. நாட்டின் மொத்த வியாபாரிகளிடம் உள்ள, 45 லட்சம் மஞ்சள் மூட்-

டைகளில், தமிழகத்தின் பங்களிப்பு 30 லட்சம் மூட்டைகளாக இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில், மஞ்சள் சாகுபடி பரப்பளவு, 40 சதவீதம் குறைந்துள்ளது. எனவே, மஞ்சளுக்கான தேவை அதிகரித்து, நவம்பர் வரை, குவிண்டாலுக்கு 800 ரூபாய் வரை, விலை உயர வாய்ப்புள்ளது.விவசாயிகள் தங்-களிடமுள்ள மஞ்சள் மூட்டைகளை, நவம்பருக்குள் அதிக லாபத்திற்கு விற்பனை செய்யலாம், என, வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

### நிலக்கடலை சாகுபடி பரப்பளவு குறைகிறது

கடலூார் : காலம் தவறிய பருவமழை, உரிய விலையின்மை மற்றும் நோய் தாக்-குதல் அதிகரிப்பு காரணமாக, கடலூார் மாவட்டத்தில், நிலக்கடலை சாகுபடி பரப்-பளவு, வெகுவாக குறைந்து வருகிறது.தமிழகத்தில், ஒரு காலத்தில், நிலக்கடலை சாகுபடியில், ஒருங்கிணைந்த தென்னாற்காடு (கடலூார், விழுப்புரம் மாவட்டங்கள்) முதல் இடத்தில் இருந்தது.

பரப்பளவு:இறவை மற்றும் மானாவாரி பட்டங்களில் அதிகளவு நிலக்கடலை சாகு-படி செய்யப்பட்டு வந்தது. கடந்த, 1989 90ம் ஆண்டுகளில், 4.8 லட்சம் ஏக்கர் பரப்-பளவில் நிலக்கடலை பயிரிடப்பட்டது. தென்னாற்காடு மாவட்டம் கடந்த, 1993ல், கடலூார் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன. அதில், கடலூார் மாவட்டத்தில் மொத்தமுள்ள, 5.32 லட்சம் ஏக்கர் விளை நிலங்களில், 94 95ல், 1.17 லட்சம் ஏக்கர் பரப்பளவில், நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும், வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்த நிலையில், நவம்பர் மாதம் – கார்த்திகை பட்டத்தில், நிலக்கடலை பயிரிட்டு, பிப்ரவரி மாதம் அறுவடை செய்வர்.இந்நிலையில், கடலூார் மாவட்டத்தில், பருவமழை காலம் தவறி பெய்து வருகிறது. கார்த்திகை பட்டத்தில் விதைக்கப்படும் நிலக்கடலை, நீரில் மூழ்கி அழுகி விடுவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி வருகின்-றனர்.இலைப்புள்ளி நோய்மேலும், நுனி அழுகல், வேர் அழுகல், இலைப்புள்ளி நோய், துரு நோய் மற்றும் சிவப்பு கம்பளிபூச்சி தாக்குதலால், மகசூல் குறைந்து,

விவசாயிகள் இழப்பை சந்திக்கின்றனர்.

இதனால், விவசாயிகள் கார்த்திகை பட்டத்தில் நிலக்கடலை பயிரிடுவதைத் தவிர்த்து, மாற்றுப்பயிருக்கு மாறி வருகின்றனர். இதன் எதிரொலியாக, கடலூர் மாவட்டத்தில் வேர்க்கடலை சாகுபடி பரப்பளவு, ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது. கடந்த 94 95ல், 1.17 லட்சம் ஏக்கராக இருந்த வேர்க்கடலை சாகுபடி, 1999 2000ல், 79 ஆயிரம் ஏக்கராகவும், 2003 04ல், 69 ஆயிரம்; 2009 10ல், 33 ஆயிரம்; 2010 11ல், 25 ஆயிரம்; 2011 12ல், 24 ஆயிரம் ஏக்கராகவும் குறைந்து வருகிறது. நடவடிக்கை இதேநிலை நீடித்தால், அடுத்த சில ஆண்டுகளில் மாவட்-டத்தில் நிலக்கடலை சாகுபடி, அறவே அற்றுப் போகும் நிலை ஏற்படும். இதைத் தடுக்க, வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வேளாண் ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

மக்காச்சோளத்திற்கு மவுசு : நிலக்கடலை சாகுபடி பரப்பளவு, ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வரும் அதே நேரத்தில், மானாவாரி பயிரான மக்காச்சோளம் பயிரிடும் பரப்பளவு, அதிகரித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், மக்காச்சோளம் பயி-ருக்குத் தண்ணீர் அதிகம் தேவையில்லை. நோய் தாக்குதல் மற்றும் பராமரிப்பு செலவு குறைவு. இவை அனைத்தையும் விட, கோழிப் பண்ணைகளுக்கு மக்கா-ச்சோளம் அதிகம் தேவைப்படுவதால், ஆண்டுக்காண்டு அதன் விலையும் உயர்ந்து வருகிறது. நிலக்கடலையைப் பயிரிட்டு, இழப்பை சந்தித்த விவசாயிகள், அதிக லாபம் கிடைக்கும் மக்காச்சோளம் பயிருக்கு மாறி வருகின்றனர். இதன் காரண-மாக, 10 ஆண்டுகளுக்கு முன்பு, 7,000 ஏக்கராக இருந்த மக்காச்சோளம் பயிரிடும் பரப்பளவு, தற்போது, 38 ஆயிரம் ஏக்கராக உயர்ந்து உள்ளது.

### பணவீக்கம் 6.46 சதவீதமாக அதிகரிப்பு

புதுடில்லி : மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொதுப் பணவீக்கம், சென்ற செப்டம்பர் மாதத்தில், 6.46 சதவீதமாக அதிகரித்துள்ளது என, மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்-

கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை மாதத்தில், நாட்டின் பொதுப் பணவீக்கம், 5.85 சத-வீதமாக இருந்தது. இது, ஆகஸ்ட் மாதத்தில், 6.1 சதவீதமாக அதிகரித்தது. வட்டி விகிதம் வங்கி மற்றும் சந்தை வட்டாரத்தினர், வங்கிகளுக்கான வட்டி விகிதம் குறைக்கப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், பணவீக்கம் அதிகரித்ததால், ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னராக பொறுப்பேற்ற ரகுராம் ராஜன், சென்ற மாதம் 20ம் தேதி, "ரெப்போ" வட்டி விகிதத்தை, 0.25 சதவீதம் உயர்த்தினார்.

இதையடுத்து, வங்கிகள் குறைந்த கால அடிப்படையில், ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறும் கடனுக்கான வட்டி விகிதம் (ரெப்போ) 7.25 சதவீதத்திலிருந்து, 7.50 சதவீ-தமாக உயர்த்தப்பட்டது. இருப்பினும், தினசரி கடனுக்கான வட்டி விகிதம், 10.25 சதவீதத்திலிருந்து, 9 சதவீதமாக குறைக்கப்பட்டது. சென்ற செப்டம்பரில், வெங்-காயத்தின் விலை, ஆண்டு கணக்கில், 323 சதவீதம் அதிகரித்திருந்தது. இதுவே, பொதுப் பணவீக்கம் அதிகரிப்பிற்கு முக்கிய காரணம் என, கூறப்படுகிறது.

இது தவிர, காய்கறிகளின் விலை, 89.37 சதவீதம் என்ற அளவிலும், பழங்களின் விலை, 13.54 சதவீதம் என்ற அளவிலும் அதிகரித்திருந்தது. கணக்கீட்டு மாதத்தில், உணவு பணவீக்கம், 18.40 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஆகஸ்ட் மாதத்தில், 18.18 சதவீதமாக காணப்பட்டது.கணக்கீட்டு மாதத்தில், இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோல் ஆகியவற்றின் விலை முறையே, 9 சதவீதம் மற்றும் 9.64 சதவீதம் என்ற அளவில் அதிகரித்திருந்தது. இருப்பினும், முட்டை, இறைச்சி, மீன்கள், குளிர்பானம் உள்ளிட்ட தயாரிப்பு பொருட்கள், புகையிலை பொருட்கள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது.

தயாரிப்பு துறை சார்ந்த பணவீக்கம், கணக்கீட்டு மாதத்தில், ஆண்டுக் கணக்கில், 2.03 சதவீதம் அதிகரித்திருந்தது. சில்லரை பணவீக்கம்ரிசர்வ் வங்கியின் இரண்டா-வது காலாண்டிற்கான நிதி ஆய்வு கொள்கை, இம்மாதம், 29ம் தேதி அறிவிக்கப்பட உள்ளது. பணவீக்கம் அதிகரித்துள்ளதால், வங்கிகளுக்கான வட்டி விகிதம் குறைக்-கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதற்கிடையே, நுகர்பொருள் குறி-

யீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், சில்லரை பணவீக்கம், சென்ற செப்டம்பரில், 9.84 சதவீதம் என்ற அளவில் உயர்ந்து உள்ளது. இது, இதற்கு முந்தைய ஆகஸ்ட் மாதத்தில், 9.52 சதவீதம் என்ற அளவில் இருந்தது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 15.10.2013

### நாகை மாவட்டத்தில் தினமும் ரூ.10 கோடி மதிப்பு மீன், இறால், நண்டு ஏற்றுமதி



நாகை: நாகை மாவட்டத்தில் 5 லட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 1 லட்சம் பேர் மீன்பிடி சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.10 கோடி மதிப்புள்ள மீன்கள், இறால் வகைகள், நண்டு ரகங்கள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.ஏற்றுமதி ரக மீன், நண்டு, இறாலின் இன்றைய சந்தை விலை (ஒரு கிலோவிற்கு): வவ்வால் ரூ.950, வெள்ளை வாவல் ரூ.600, சிங்கி இறால் ரூ.3700, கணவாய் ரூ.177, பன்னி ரூ.160, கடல் விறால் ரூ.250, வஞ்சிரம் ரூ.480, கொடுவாய் ரூ.320, வெள்ளை களவாய் ரூ.220, விலை மீன் ரூ.310, புள்ளி நண்டு ரூ.220, கண் நண்டு ரூ.110, காளா ரூ.220, உள்ளம் ரூ.280.

### சிங்கப்பூருக்கு அரிசி சப்ளை முதலிடம் பிடித்தது இந்தியா



சிங்கப்பூர்: சிங்கப்பூருக்கு அரிசி சப்ளை செய்வதில், இந்தியா முதலிடத்தை பிடித்துள்ளது.சிங்கப்பூருக்கு அரிசி சப்ளை செய்யும் நாடுகளில், தாய்லாந்து முதலிடத்தில் இருந்து வந்தது. இந்நிலையில், தற்போது அந்த இடத்தை முதல் முறையாக இந்தியா பிடித்துள்ளது. நடப்பு ஆண்டின் முதல் 8 மாதங்களில், இந்தியாவில் இருந்து சிங்கப்பூருக்கு 92,865 டன் அரிசி ஏற்றுமதியாகி உள்ளது. அதாவது சிங்கப்பூருக்கு வந்த மொத்த அரிசியில் 32.9 சதவீதமாகும்.தொடர்ந்து முதல் இடத்தில் இருந்து வந்த தாய்லாந்து, 2வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. ஆகஸ்ட் வரையிலான காலத்தில் அது, 85,816 டன் அரிசியை சப்ளை செய்துள்ளது. இது சிங்கப்பூரின் மொத்த அரிசி இறக்குமதியில் 30.4 சதவீதம். இதற்கு அடுத்தபடியாக வியட்நாம் 77,459 டன் அரிசியை ஏற்றுமதி செய்து, 3வது இடத்தை பிடித்துள்ளன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.10.2013**

**ஆயுதபூஜையை முன்னிட்டு 60 டன் பூக்கள் விற்பனை**

தேனி,

தேனி பூ மார்க்கெட்டில் ஆயுதபூஜையை முன் னிட்டு 60 டன் பூக்கள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. இதன் மூலம் ரூ.10 லட்சம் வர்த்தகம் நடந்து உள்ளது.

60 டன் பூக்கள்

ஆயுதபூஜை பண்டிகை இன்று (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இந்த பண்டிகையின் போது கோவில்களில் சிறப்பு பூஜை நடைபெறுவதோடு, கடைகள், வர்த்தக நிறுவனங்கள், தொழிற்சாலைகள், பல்வேறு அலுவலகங்கள் மற்றும் வீடு களிலும் மக்கள் பூஜை செய்து வழிபாடு நடத்துவது வழக்கம் ஆகும். இதனால் இந்த பண்டிகைக்கு பூக்களின் பயன் பாடு அதிகம் இருக்கும்.

ஆயுதபூஜையை முன்னிட்டு தேனி பூ மார்க்கெட்டுக்கு நேற்று பூக்களின் வரத்து அதிக அளவில் இருந்தது. மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 60 டன் பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தது. வரத்து அதிகரித்து இருந்த நிலையில் விலையும் உயர்ந்து காணப்பட்டது.

ரூ.10 லட்சம் வர்த்தகம்

மல்லிகை பூ கிலோ ரூ.700-க் கும், ஜாதிப் பூ கிலோ ரூ.600-க் கும் விற்பனை செய்யப்பட்டது. அதே போன்று ஒரு கிலோ செண்டு பூ ரூ.70-க்கும், செவ் வந்தி ரூ.200-க்கும், கோழிக் கொண்டை பூ ரூ.40-க்கும், அரளி ரூ.250-க்கும், சம்பங்கி

ரூ.250-க்கும், வாடாமல்லி ரூ.40-க்கும், கனகாம்பரம் ரூ.400-க்கும் விற்பனை செய்யப்பட்டது. மற்ற பூக் களின் விலையும் அதிகரித்து காணப்பட்டது.

பூக்கள் வாங்க மார்க் கெட்டில் நேற்று வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கூட்டம் அதிக அளவில் இருந்தது. விற்பனை தொடங்கிய சில மணி நேரங்களில் பெரும்பகுதி பூக்கள் விற்றுத் தீர்ந்தன. தேனியில் நேற்று ஒரே நாளில் சுமார் ரூ.10 லட்சத்திற்கு பூக்கள் விற்பனை செய்யப் பட்டன.

**உடுமலையில் இறைச்சி விற்பனை குறைந்தது**

உடுமலை

உடுமலை, ராஜேந்திரன் ரோட்டில் ஆடு, கோழி, இறைச்சிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. மேலும் நகரின் பல பகுதிகளில் ஆட்டிறைச்சி மற்றும் கோழிக்கடைகள் உள்ளன. ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் இறைச்சி மற்றும் மீன் விற்பனை அமோகமாக இருக்கும். இந்த நிலையில் கடந்த 12–ந் தேதி புரட்டாசி கடைசி சனிக்கிழமை, 13–ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆயுத பூஜை, நேற்று விஜயதசமி என்பதால் இறைச்சி மற்றும் மீன் விற்பனை மிகவும் குறைவாக இருந்தது. அதே சமயம் உடுமலை வாரச்சந்தையில் காய்கறிகள் வாங்க மக்கள் கூட்டம் அதிகம் இருந்தது.